பெயர் : திகதி :

வரலாறு ஆண்டு 5

**<u>நாட்டின் இறையாண்மைக்குச் சவால்</u>**

**<u>நம் நாட்டில் அந்நிய சக்திகளின் வருகைக்கான காரணிகளை விளக்கத்துடன் இணைத்திடுக. ( பாட நூல் பக்கம் 50,51 )</u>**

சமயத்தைப் பரப்புதல்

- கிழக்கு மேற்கு வாணிப வழியில் மலாக்கா அமைந்துள்ளது.
- மலாக்கா முக்கியத் தங்குமிடத் துறைமுகமாக விளங்கியது.
- போர்த்துகீஸியர்களும் டச்சுக்காரர்களும் மலாய்த்தீவுகளின் மசாலைப் பொருள்களின் வாணிபத்தைத் தம் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர மலாக்காவை வசமாக்கிக் கொள்ள ஆர்வம் கொண்டனர்.

கேந்திரத்துவமிக்கப் பகுதி

- ஈயம், எஃகு, தங்கம் போன்றவை மலாயாவின் **இயற்கை வளங்களாகும்**.
- வெட்டுமரம், பிரம்பு, பறவைக் கூடு போன்றவை சபாவின் புகழ் பெற்ற **இயற்கை மூலங்கள்** ஆகும்.
- தங்கம், ஜவ்வரிசி, கற்பூரம் ஆகியவை சரவாக்கில் காணப்படுகின்றன.

தொழிற்புரட்சி

- அந்நிய சக்திகள் கிறிஸ்துவ சமயத்தை மலாயா உட்பட பல இடங்களில் பரப்ப எண்ணினர்.
- போர்த்துகீஸிய அரசர் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்ப கடல் பயணங்களை ஊக்குவித்தார்.

இயற்கை மூலமும் இயற்கை வளமும்

- அந்நிய சக்திகள் தமக்கும் நாட்டுக்கும் புகழைச் சேர்க்க விரும்பின.
- பிரிட்டிஷ் மாபெரும் காலனித்துவச் சக்தியாகத் தோன்றியது.
- பினாங்கிலும் சிங்கப்பூரிலும் பிரிட்டிஷாரின் வெற்றியைப் பார்த்த ஜேம்ஸ் புருக் சரவாக்கைத் தம் வசப்படுத்தினார்.

புகழ்

- 18ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி ஐரோப்பாவில் விரிவடைந்தது.
- இரும்பு, எஃகு தயாரிப்பு, வாகனத் தயாரிப்பு, உணவைக் கலனிடுதல் போன்ற தொழில்துறைகள் மும்முரமாக நடைபெற்றன.
- அந்நிய சக்திகள் தங்களின் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்குப் புதிய காலனித்துவ நாடுகள் தேவைப்பட்டன.

LIVEWORKSHEETS